<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>MCOP.No.232/2024</u>**

பெயர் : ஆண்டாள் (PW1)

க/பெ. : பஞ்சவர்ணம்

தேதி : 17.06.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

விபத்தின் போது என்னையும் சேர்ந்து 24 நபர்கள் பயணம் செய்தோம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் விவசாய தினக்கூலி என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த வாகனம் வேன் ஆகும். அந்த வேனில் 13 சீட் எண்ணிக்கை தான் உண்டு என்றால் சரிதான். அந்த வாகனத்தின் RC புக் மற்றும் காப்பீடு பாலிசியில் சீட் அளவு 13 எண்ணிக்கை என்று தான் உள்ளது. அதனால் 13 நபர்கள் பயணம் செய்யக்கூடிய வாகனத்தில் 25 நபர்கள் பயணம் செய்தது விதி மீறல் என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த வேனின் முன்புறம் சென்ற லாரி திடீரென்று பிரேக் அடித்ததால் நாங்கள் பயணம் செய்த வேன் லாரியின் பின்புறமாக மோதிவிட்டது என்றால் சரிதான். இந்த விபத்தில் போது எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம் தான் என்றால் சரிதான். மற்ற நபர்களுக்கும் விபத்தின் போது சாதாரண காயம் தான் ஏற்பட்டது. அதிக நபர்களை ஏற்றிக்கொண்டு பயணம் செய்ததால் தான் வாகனத்தில் அதிக சுமை இருந்ததால் தான் பிரேக் அடித்ததால் வாகனம் நிற்கவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தில் மனுதாரர்களான எங்களது அஜாக்கிரதையும் காரணம் என்றால் சரியல்ல. அளவுக்கு அதிகமான நபர்களை ஏற்றிக்கொண்டு சென்றதால் வேன் ஓட்டுனரும் விபத்துக்கு காரணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள விபத்துப்பதிவேட்டில் சாதாரண காயம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து திருத்தம் செய்யப்பட்ட மோட்டார் வாகன சட்டம் 01.04.2022ற்கு பிறகு ஏற்பட்ட விபத்து என்றால் சரிதான்.

இந்த விபத்து காப்பீடு விதிமீறல் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர்அல்ல என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட சட்டத்தின்படி Pay & recovery என்கிற கோட்பாடு நீக்கப்பட்டதால் இந்த வழக்கில் Pay & recovery வழங்க முடியாது என்று சொன்னால் அதுப்பற்றி தெரியாது. நான் புற நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு அதிகம் என்றால் சரியல்ல. அவ்வாறு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றாலும் 1, 2, எதிர்மனுதாரர்கள் மீதுதான் உத்தரவு போடமுடியும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.